Cheshire Home, Katpadi

* 68 *Q.*—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether the Government have discontinued the grants for the Cheshire Home at Katpadi; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) இல்லை.

(இ) இந்தக் கேள்விக்கு இடமில்லை.

திரு. நா. வீராசாமி: காட்பாடி நகரத்தில் அமைக்கப் பட்டிருக்கிற செஷைர் ஹோம் என்பது, அரசு ஊழியர்கள், தனியார் நிறுவன ஊழியர்கள் கணவன்—மனைவி இருவரும் வேலைசெய்யக்கூடியவர்களாக இருந்தால், அவர்களுடைய குழந்தைகளைப் பராமரிக்க கிறிஸ்தவர்களால் உருவாக்கப்பட்ட இல்லமாகும். அது பல ஆண்டு காலத்திற்கு முன்னல் உருவாக்கப் பட்டு, இப்பொழுது ஏராளமான குழந்தைகள் அங்கு வருகிறார்கள். அவர்களைப் பேணிக் காப்பதற்கு ஏற்கெனவே அன்னிய நாட்டி லிருந்து அந்த மானிய உதவி வராத காரணத்தால், இப்போது இருக்கிற குழந்தைகளைக் காப்பாற்ற முடியாமல் கஷ்டப் படுவதாகத் தெரிகிறது. அப்படிப்பட்ட இல்லத்தார் விண்ணப் பித்தால் இன்னும் அதிக மானிய உதவி வழங்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: கேள்வி பொருத்தமானது தான். ஆனல், சமூக நலத் துறையில் இந்த செஷைர் ஹோம் கவனிக்கப்படுகிறது. சென்ட்ரல் சோஷல் வெல்ஃபேர் போர்டும், மாநில சோஷல் வெல்ஃபேர் போர்டும் அவர்களுக்கு உதவி செய்கிறது. அவர்கள் தொழு நோய் உள்ள குழந்தைகளுக்கு சிகிச்சை அளிப்பதற்கு மருத்துவத் துறையின் சார்பாக உதவி வழங்க முடியும் என்ற நிலையில் ஏற்கெனவே வழங்கிய உதவி கூட தவருன அடிப்படையில் வழங்கப்பட்டுவிட்டது என்று திருப்பிக் கேட்கத்தக்க செய்தி உட்பட இருக்கிறது.

Drinking water supply scheme for Kanyakumari district

* 69 *Q.*—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Health be pleased to state whether it is a fact that the Vilathurai Lift Irrigation Scheme in Kanyakumari district is to be utilised as a Drinking water supply scheme?

1974 சனவரி 22]

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தற்போது விளத்துறை இறைவைப் பாசனத் திட்டத்தை விளவங்கோடு வட்டத்தில் உள்ள ஊராட்சிகளுக்கு நம்பகமான பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கல் திட்டத்திற்குப் பயனுள்ள வகையில் பயன்படுத்திக் கொள்வது பற்றி, விரிவாக ஆய்வு செய்யப்பட்ட பின்னரே முடிவு செய்ய முடியும்.

திரு. என். டென்னிஸ்: இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்ட போது, குடி தண்ணீர் வசதிக்காகவும், விவசாய அபிவிருத்திக் காகவும் சேர்த்து ஆரம்பிக்கப்பட்ட திட்டமாகும். அந்தப் பகுதி வறட்சிப் பகுதியாக இருக்கிற காரணத்தால் அங்குள்ள மக்கள் கஷ்டப்படுகிற ஒரு நிலை இருக்கிறது. ஆகையால், இதைக் குடி நீர் திட்டமாகவும் மாற்றியமைக்க அரசு வேண்டிய நடவடிக் கையினை மேற்கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, தொடங் குகிறபோது அப்படித் தொடங்கினாலுங்கூட, அங்கே பக்கத் திலேயே ஆற்றும் பாசனத் திட்டம் ஒன்று நிறைவேற்றப்பட்டு விட்டதன் காரணமாக, இப்பொழுது இறைவைப் பாசனத் திட்டம் பாசனத் திட்டத்திற்குப் பயன்படவில்லை. ஆகவே, இந்தத் திட்டத்தைப் பக்கத்திலுள்ள ஐந்தாறு பஞ்சாயத்துக்களுக்கும் சேர்த்த அளவில் குடிநீர்த் திட்டமாக மாற்றியமைப்பது பற்றிய பரிசீலனை நடைபெற்றது. அப்படி அந்தப் பரிசீலனைக்கு உட் படுவதற்கு பஞ்சாயத்துக்கள் அனைத்தும் இசைந்து வரவில்லை. அவற்றிலே ஒரு பஞ்சாயத்து, 'எங்களுக்கு அது தேவை இல்லை' என்று தெரிவித்து விட்டார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக மற்ற பகுதிகளுக்கு என்ன என்ன திட்டங்களுக்கு முன்கூட்டி ஆய்வு நடைபெற வேண்டும், அந்த ஆய்வு நடைபெறு வதற்கான செலவை மீதமிருக்கும் பஞ்சாயத்துக்கள் ஏற்றுக் கொள்ள முடியுமா என்று கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கின்றன. அந்த ஆய்வின் அடிப்படையில்தான் செயல்முறைப்படுத்த முடியும். நீர்ப்பாசனத்திற்குப் பயன்படுத்துகிற முறை வேறு; குடிநீருக்கு அதே தண்ணீரைக் கொண்டு சேர்க்கிற முறை வேறு.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்திற்கு இசைவு தராத ஒரு பஞ்சாயத்து நீங்கலாக எஞ்சிய பஞ்சாயத்துக்கள் இதனையும் ஏற்றுக்கொள்ள இசைவு தந்து,

பரிந்துரையும் வந்திருக்கிறது. அது மட்டுமின்றி, புதுக்குடி டவுன் பஞ்சாயத்தில் முன்பிருந்த அரசாங்கம் 65,000 ரூபாய் செலவிட்டு மேல்நிலைத் தொட்டி கூட ஏற்படுத்தியிருக்கிறது. ஆனால், அந்தத் தொட்டியில் ஒரு சொட்டுத் தண்ணீர்கூட வரவில்லை. ஏனென்றால், தண்ணீர் இல்லை. ஆகவே, இந்த இரண்டு திட்டங்களையும் ஒருங்கிணைத்து வேண்டிய ஏற்பாடு செய்ய அரசு முற்படுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, நீர் வழங்கல் திட்டத்திலிருந்து மான்கோடு ஊராட்சியை நீக்க வேண்டும் என்றும் இணைந்த நீர் வழங்கல் திட்டத்தின் மதிப்பீட்டையும் வாரியம் ஒப்பளிப்பதற்காக எஞ்சியுள்ள ஊராட்சி ஒன்றியங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டிய திருத்தியமைக்கப்பட்ட வீதாசாரச் செலவுகள் எவ்வளவு என்பதை உடனடியாகக் குறிப்பிடுமாறும் தமிழ்நாடு நீர் வழங்கல்-கழிவு நீர் அகற்று வாரியத்தின் தலைமைப் பொறியாளர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார். வாரியத்திடமிருந்து திருத்த மதிப்பீடு எதிர்பார்க்கப்படுகிறது. அது வரப் பெற்றவுடன், வாரியம் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க முயற்சிக்கும்.

அம்மூர் பேரூராட்சிக்கு குடிநீர் வழங்கு திட்டம்

*70 வினா—திரு. கே. ஏ. வகாப்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடார்க்காடு ஜில்லா வாலாஜா ஒன்றியத்தில் உள்ள அம்மூர் பேரூராட்சியில் ஒரு குடிநீர் விஸ்தரிப்புத திட்டம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) இல்லை.

(இ) அம்மூர் பேரூராட்சியினர் முன் வந்து தங்களுடைய போரூராட்சிக் குடி தண்ணீர் விஸ்தாரிப்புத் திட்டம் வேண்டுமென்று தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தை அணுகி, ஆய்வுச் செலவை ஏற்றுக் கொள்வதாய் இருந்தால், அம்மூர் பேரூராட்சிக்கு குடிநீர் விஸ்தரிப்புத் திட்டம் அமுலாக்குவதற்கு தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும்.